


கோவாவில் 20வதாவது கடல்சார் மாநில மேம்பாட்டுக்குழுக் கூட்டம், நேற்று (13.09.2024) ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் ஸ்ரீ சர்பானந்த சோனவால் தலைமையில் நடைபெற்ற இக்குழுக்கூட்டத்தில் தமிழ்நாட்டின் சார்பாக பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பங்கு பெற்று ஆங்கிலத்தில் உரையாற்றினார். ஒன்றிய அமைச்சர் ஸ்ரீ சர்பானந்த சோனவால், ஒன்றிய அமைச்சர் ஸ்ரீ சாந்தனு தாக்கூர் மற்றும் கோவா மாநில முதலமைச்சர் ஸ்ரீ.பிரமோத் சாவந்த் ஆகியோர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார். இக்கூட்டத்தில் கடலோர மாநிலங்களின் முதலமைச்சர்கள், துறைமுகங்கள் அமைச்சர்கள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்களும் பங்கேற்றனர்.



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். கழக முன்னணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### கடல்சார் பாரம்பரியத்தை மாநில அரங்கில் காட்சிப்படுத்துவதில் தமிழ்நாடு ஆர்வம்!

# இந்திய அரசு 100 சதவிகிதம் நிதி உதவி வழங்கிட வேண்டும்!

## கோவாவில் நடைபெற்ற கடலோர மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உரை!

கோவா, செப்.14-

இந்தியாவின் கடல்சார் துறையை மேம்படுத்துவதில், கடலோர மாநிலங்களின் பங்களிப்பு மற்றும் கூட்டு முயற்சியை வலுப்படுத்தும் விதமாக நேற்று (13.09.2024) கோவாவில் நடைபெற்ற கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழுமக் கூட்டத்தில், தமிழ்நாடு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு பங்குப்பெற்று ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு:-

ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் ஸ்ரீ சர்பானந்த சோனவால்ஜி அவர்களுக்கும், அமைச்சர் ஸ்ரீசாந்தனு தாக்கூர்ஜி அவர்களுக்கும், மாநில முதலமைச்சர் ஸ்ரீ பிரமோத் சாவந்த் அவர்களுக்கும், கடலோர மாநிலங்களின் முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் ஒன்றிய அரசு, மாநில அரசு அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் தமிழ்நாட்டின் சார்பாக, வணக்கத்தை தெரிவித்து, இக்கூட்டத்தின் மூலம் அனைவரையும் ஒருங்கிணைத்ததுடன், நாகப்பட்டினம் துறைமுக வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ.10.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்ததற்கு நன்றி தெரிவித்தார். இந்த நிதி உதவியானது நாகப்பட்டினம் மற்றும் இலங்கையின் காங்கேசன்துறைக்கு இடையே பாதுகாப்பான மற்றும் வசதியான கப்பல் சேவைகளை உறுதி செய்வது முக்கிய மானதாகும் மற்றும் இலங்கையுடனான உறவுகளை வலுப்படுத்தும் என்று தெரிவித்தார்.

**நாகப்பட்டினம் துறைமுகம் விரிவாக்கம்**

நாகப்பட்டினம் துறைமுகத்தின் விரிவாக்கத்திற்காக, சாகார்மாலா திட்டத்தின் கீழ் ரூ.300 கோடி நிதியுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன் மூலம் நடுத்தர அளவிலான சரக்கு மற்றும் பயணிகள் கப்பல்களை கையாளுவதற்கும், இலங்கையுடனான வர்த்தகத்தை மேலும் மேம்படுத்துவதற்கும் உதவும் என்று தெரிவித்தார்.

கடல்சார் பணியாளர்களின் மேம்பாடு மற்றும் திறன்மேம்பாடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனவே, தூத்துக்குடியிலுள்ள தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனத்தின் முக்கியத்துவம் முன்னிலைப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் தென் கடற்கரையோரத்தில் வாழும், சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் மீனவர் சமூகங்களை சேர்ந்த இளைஞர்களுக்கு பயிற்சி மற்றும் திறன்மேம்பாட்டுத் திட்டங்களையும், குறிப்பாக இந்திய மற்றும் வெளிநாட்டு கப்பல்களில் மாற்று வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. தூத்துக்குடியிலுள்ள இந்த தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனத்தின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக சாகர்மாலா திட்டத்தின், கடலோர சமூக மேம்பாட்டின்கீழ், 100% சதவீத நிதியுதவியாக ரூ.11.47 கோடிக்கான அனுமதி விரைவில் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**வரலாற்று சிறப்புமிக்க இராமேஸ்வரம்**

வரலாற்று சிறப்புமிக்க இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார் இடையேயான கப்பல் போக்குவரத்து குறிப்பிடத்தக்க கலாச்சார மற்றும் பொருளாதார மதிப்பு பெற்றுள்ளது. இந்த சேவை ஒரு காலத்தில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான முக்கிய இணைப்பாக அடையாளப்படுத்தப்பட்டது. இக்கப்பல் சேவையினை மீண்டும் துவங்க இராமேஸ்வரத்தில் தேவையான உள்கட்டமைப்பை மேம்படுத்த 100% சதவீத நிதியுதவி வழங்க வேண்டும். இதன் மூலம் இப்பகுதியில் சுற்றுலா மற்றும் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்று தெரிவித்தார்.

மேலும், தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் மிதக்கும் தோணித் துறை பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இராமேஸ்வரம் தீவு, ஆன்மீக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆண்டு முழுவதும் ஏராளமான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றனர். இந்த முக்கியமான தீவின் இணைப்பினை வலுப்படுத்துவும், சுற்றுலா அனுபவத்தை மேம்படுத்தவும், மண்டபம், பாம்பன் மற்றும் தேவிபட்டினத்தில் கூடுதலாக மூன்று மிதக்கும் தோணித்துறைகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

குஜராத்திலுள்ள லோத்தலில் தேசிய கடல்சார் பாரம்பரிய அருங்காட்சியக வளாகம் உருவாக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு ஒரு வளமான கடல்சார் வரலாற்றைக் கொண்டுள்ளது. மேலும், இந்த பாரம்பரியத்தை மாநில அரங்கில் காட்சிப்படுத்துவதில் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். தமிழ்நாடு மாநில அரங்கினை உருவாக்குவதற்கு இந்திய அரசு 100% சதவீத நிதியுதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இறுதியாக இங்கிருக்கும் அனைத்து விருந்தினர்களுக்கும், இந்நிகழ்ச்சியில் வெற்றிகரமாக்க தங்களது மதிப்புமிக்க கருத்துகளைத் தெரிவித்த பேச்சாளர்களுக்கும் நன்றி தெரிவித்து கொண்டு, மேலும் 20வதாவது கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழுமக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் சார்பாக பங்கேற்க எனக்கு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

மாநில பொருளாதாரத்தினையும், இந்திய பொருளாதாரத்தினையும் உயர்த்திட இதுபோன்ற சிறப்பு கருத்தரங்கம் நடத்துவது மிகவும் சாலச் சிறந்தது. மத்தியில் கூட்டாட்சி தத்துவதற்கு என்றைக்கும் எங்கள் முதலமைச்சர் முன்னுரிமை அளிப்பார் என்று தெரிவித்தார். மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு துறைமுகங்கள் வளர்ச்சி பெறவும், மாநில அரசினுடைய பொருளாதாரம் மேம்பாடு அடையவும், உந்து சக்தியாக உதவிட வேண்டும் என்று ஒன்றிய அரசைக் கேட்டுக் கொண்டார்.

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு“ என்ற முதுமொழிக்கேற்ப தமிழ்நாடு மக்கள் பயன் அடையும் விதமாக நடைபெறும் இந்த கருத்தரங்கிற்கு, தமிழ்நாடு முதலமைச்சர் சார்பாகவும், என் சார்பாகவும் நல்வாழ்த்துகளை சொல்லி உரையை நிறைவு செய்கிறேன்.

### சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி

# 116(அ) வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஜெ.விஜயகுமார் அறிக்கை!

சென்னை, செப்.14-

திருவல்லிக்கேணி பகுதி 116 அ வட்டத்தில் பகுதி கழக செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் எம்.சி. முன்னிலையில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. சிறப்புரையில் 116 அ வட்ட கழக செயலாளர் (ஜெ.விஜயகுமார்) எனது தலைமையில் வட்ட அவைத் தலைவர் த.பக்தவச்சலம் வரவேற்கிறார்.

நாளை (15.09.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில் 116அ வட்டபொது உறுப்பினர் கூட்டம் (ஸ்ரீ விநாயகா ஹால்) எண். 49, எஸ்.எம்.வி.கோயில் தெரு, திருவல்லிக்கேணி நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் வட்ட கழக நிர்வாகிகள் வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் கழக உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுகொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு வட்ட செயலாளர் ஜெ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.



காஞ்சி வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி மாவட்ட பிரதிநிதியும் முன்னாள் நகரமன்ற உறுப்பினருமான என்.பெருமாள் தந்தை நாராயணசாமி அவர்கள் 12/9/2024 வியாழக்கிழமை இரவு இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு கழக அமைப்பு செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். 12வது மண்டல குழு தலைவர் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என். சந்திரன், பகுதி நிர்வாகிகள் பூவராகவன், டி.ஜெயகுமார், வட்டக் கழக செயலாளர் ஜெ. நடராஜன், மாவட்ட பிரதிநிதிகள் கோ. பிரபாகரன், வீரராகவன் (எ) ரமேஷ், வீ. ரமணா, பிரான்சிஸ், கோ.சுதாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்தும் நோக்கில்

# பல்வேறு நிறுவனங்களின் தொழில் முதலீடுகளை ஈர்த்த முதல்வருக்குப் பாராட்டு!

## சென்னை கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை!

சென்னை, செப்.14-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (13.9.2024 - வெள்ளிக்கிழமை) சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத் தலைவர் கோ.ஏகப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை யாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் : ப.தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், எஸ்.மணிமுடி, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், சி.மகேஷ் குமார் மற்றும் தமிழன் பிரசன்னா, பரிதிஇளம்சுருதி, எம்.பி.எம்.ஷேக்அப்துல்லா, வரதன்,

மாவட்ட நிர்வாகிகள் : தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன், இசட்.ஆசாத் தொகுதி பொறுப்பாளர்கள் : பி.டி.சி.செல்வராஜ், பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ் வேந்தன், எம்.சாமிக் கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், DSP. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி. சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் : கோ.மணி, டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, பி.ஜே.துளசிங்கம், பி.உதயசங்கர், அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: க. வினோத், ஜி.ஜே.பிரபு, ஆர். டி.சங்கர்நானா, வானவில் விஜய், நா.துலுக்காணம், எல்.பி.எப். மோகன், வீரமணி, பி.ஸ்ரீராமுலு, எம். பிரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், து. ஆயிரம், துரைக்கண்ணன், மா.அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப் குமார், ஆர்.எஸ்.சித்திக், எல்.சம்பத்குமார், சுதாதீன தயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன் மற்றும் வட்ட கழக செயலார்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ர மூர்த்தி நன்றி கூறினார்.

**தீர்மானம்1**

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்தும் இலக்கை நோக்கி அமேரிக்கா நாட்டிற்கு சென்று புலம் பெயர்ந்த தமிழர்களையும் பல்வேறு நிறுவனங்களின் தொழில் அதிபர்களையும் தலைமை நிர்வாக அதிகாரிகளையும் சந்தித்து குறிப்பாக ஜாபில், ராக்வெல் ஆட்டோமேஷன், ஆட்டொடெஸ்க், கேட்டர்பில்லர், போர்டு மற்றும் பல்வேறு நிறுவனங்களின் தொழில் முதலீடுகளை ஈர்த்த, தமிழ்நாடு முதலமைச்சரை பாரா ட்டியும், அங்கிருந்தபடியே அரசு கோப்புகள் தேங்காதவாறு இஆபிஸ் வழியே பணிகளை மேற்கொண்ட முதல்வரை வணங்கியும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம்2**

தெற்காசியாவிலேயே முதன் முறையாக ஃபார்முலா 4 இரவு நேர ஸ்டிரீட் கார் பந்தயத்தை சர்வதேச கவனத்தை ஈர்க்கும் வகையில், சென்னையில் நடத்தி அனைத்து தரப்பு மக்களின் பாராட்டையும் பெற்று உலகளவில் இந்தியாவிற்கும், தமிழ்நாட்டுக்கும் விளையாட்டு துறையில் தனி இடத்தைப் பெற்றுத் தந்த மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் பெருமைமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களை பாராட்டியும், வாழ்த்துக்களை தெரிவித்தும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம்3**

சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ திடலில் 17.9.2024 செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி அளவில் நடைபெறும் திமுக பவள விழா மற்றும் முப்பெரும் விழாவில் கழகப் பணியில் சிறப்பாக செயல்பட்டு பெரியார் விருதுபெறும் திருமதி பாப்பம்மாளுக்கும், அண்ணா விருது பெறும் அறந்தாங்கி மிசா இராமநாதன் அவர்களுக்கும், கலைஞர் விருது பெறும் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்களுக்கும், பாவேந்தர் விருதுபெறும் கவிஞர் தமிழ்தாசன் அவர்களுக்கும், பேராசிரியர் விருதுபெறும் வி.பி. ராஜன் அவர்களுக்கும், கழகத் தலைவர் பெயரில் விருதுபெறும் எஸ்.எஸ். பழனி மாணிக்கம் அவர்களுக்கும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தும், இப்பெருமைமிகு விழாவில் பெருந்திரளாக பங்கேற்க முடிவெடுத்தும், தொடர்ந்து கழகத் தலைவர் ஆணைப்படி கழகப் பவள விழாவை ஒட்டி சென்னை கிழக்கு மாவட்டம் முழுவதும் கழகக் கொடி கம்பங்களை புதுப்பித்து இரு வண்ணக் கொடி ஏற்றியும், கழகத்தினர் வீடுகள் தோறும் கழகக் கொடியை பட்டொளி வீசி பறக்க செய்ய உறுதியேற்றும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.




மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சீத்தாராம் யெச்சூரி மறைவெய்தியதையொட்டி, சென்னை, தியாகராயர் நகர், வைத்தியராம் தெருவில் உள்ள சி.பி.எம். தமிழ் மாநிலக்குழு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த மறைந்த சீத்தாராம் யெச்சூரி அவர்களின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் எம்.பி., மலர்தூவி மரியாதை செலுத்தினர். அதுபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலக்குழுச் செயலாளர் தோழர் கே. பாலகிருஷ்ணன், மாநில செயற்குழு உறுப்பினர் ஜி. ராமகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் நகரக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நகரக் கழகச் செயலாளரும் நகர மன்ற துணைத் தலைவருமான சி.சு.ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் திருவள்ளூரில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் விஜி.ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். உடன் மாவட்ட அவைத் தலைவர் திராவிட பக்தன் மாநில நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேஷன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், இ.குருதாஸ், ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், ஒன்றிய கழகச் செயலாளர் எஸ். மகாலிங்கம், ஆர்.ஜெயசீலன், நகரக் கழக நிர்வாகிகள் தி.ஆ.கமலக்கண்ணன், டி.எம்.ரவி, என்.பரசுராமன், ராஜேஸ்வரி கைலாசம், எஸ்.டி.பி.சம்பத் ராஜா, இ.குப்பன், டி.என்.ஆர்.சீனிவாசன், டி.சிவக்குமார் உள்பட கழக முன்னாள் இந்நாள் நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர்கள் கவுன்சிலர்கள் பலர் கலந்து கொண்டனர்.